DEPOSITION OF WITNESS

IN THE COURT OF PRINCIPAL LABOUR COURT, COIMBATORE.

**CP.No.** 02 /2024

| | |
|---|---|
| DEPOSITION OF WITNESS | RW1 |
| NAME | Dhanpakiyam |
| FATHER NAME | Ganesh |
| ADDRESS | Incharge Secretaryof Thutharipalayam, PACCS, Tirupur |
| AGE | 53 |

Solemnly affirmed in accordance with provision of Act x of 1875.

Date..12.01.2026

**குறுக்கு விசாரணை -**

நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பொறுப்பு செயலாளராக இருந்துவருகிறேன். செயலாளருக்கு காசோலையில் கையொப்பம் செய்ய அனுமதி உள்ளதென்றால் சரியல்ல. நான் நிர்வாத்தில் வேலை செய்யும் தொழிலாளருக்கு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் மேற்படி நபரை மற்றொரு கிளைக்கு மாறுதல் செய்வதற்கும் எனக்கு அதிகாரம் உள்ளதா என்றால் இல்லை. தனி அலுவலரின் அனுமதி மற்றும் ஆலோசனையில் மட்டுமே

எனக்கு நடவடிக்கை எடுக்க அதிகாரம் உள்ளது. எனக்கே இந்த காசோலையில் கையொப்பம் செய்வதற்கும் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கும் அதிகாரம் இல்லை என்றபோது எவ்வாறு மனுதாரருக்கும் மட்டும் காசோலை கையோப்பம் இடுவதற்கும், பணியிடை மாறுதல் செய்வதற்கும், பணிநீக்கம் செய்வதற்கும் அதிகாரம் இருக்கும் என்றால் மனுதாரர் 35 வருடம் சர்வீஸ் உள்ளதால் அவருக்கு அதிகாரம் உள்ளது. சங்கத்தின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து தனியாக விதிகள் ஏற்படுத்துவதற்கு மனுதாரருக்கு அதிகாரம் இல்லை என்றும் தனி அலுவலர் மூலமாக மட்டுமே அவ்வாறு செய்ய முடியும் என்றால் சரிதான். மனுதாரர் எங்கள் சொசைட்டியில் தனிநபர் கடன் வாங்க வில்லை Thrift Society ல் எங்கள் சங்கம் மூலமாக பெற்றுள்ளார் அதனால் எங்கள் சங்கத்திற்குதான் Demand Notice வந்து கொண்டிருக்கிறது. மனுதாரர் Thrift Society ல் தனிநபர் கடன் பெற்றுள்ளதால் எங்கள் சொசைட்டிக்கு நஸ்டம் ஏதும் இல்லை என்றால் சரிதான். ஆனால் மனுதாரரின் சம்பள தொகையில் இருந்துதான் பிடித்தம் செய்யவேண்டியுள்ளது. மனுதாரருக்குண்டான அனைத்து தொகைகளையும் மனுதாரருக்கு ஓய்வு பெறும் சமயத்தில் கொடுத்து இருந்தால் அவர் Thrift Society க்கு தனிநபர் கடனை அடைத்திருப்பால்

என்றால் சரியல்ல. மனுதாரர் Fixed Deposit ல் உள்ள தொகையை அவருக்குன்டான சம்பளத் தொகையை எடுத்து கொண்டிருந்தார். அவருக்குன்டான சம்பளம் எடுக்கும் போது மேல் அதிகாரியின் ஒப்புதல் வேண்டும். தலைவரின் ஒப்புதலை வைத்து சம்பளம் எடுத்திருப்பது தவறானதாகும். Auditing சமயத்தில் மனுதாரர் வைப்பீடு தொகையில் இருந்து சம்பளம் எடுத்து வந்தது கண்டுபிடித்திருக்க முடியும் என்றும், அவ்வாறு சரியான சமயத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நடவடிக்கை எடுத்து வந்த போது மனுதாரர் குறைந்த சம்பளத்தை எடுத்துக்கொள்வதாக ஒப்புக்கொண்டதால் நடவடிக்கை எடுக்கவில்லை. இது சம்பந்தமாக மனுதாரருக்கு எழுத்து மூலமாக எதாவது கடிதம் கொடுத்துள்ளோமா என்றால் இல்லை. மனுதாரர் தான் வங்கியின் அனைத்து நிர்வாகமும் கவனித்து வந்தார். தனிநபர் கடனை தவிர மனுதாரர் Society க்கு செலுத்த வேண்டிய தொகை ஏதும் இல்லை என்றால் சரிதான். தலைவருடைய அனுமதி இருந்தால் மனுதாரருக்கான சம்பள தொகையை எடுத்துக்கொள்ளலாம் என்றால் சரிதான் . 18(1) Settlement ஏற்படுவதற்கு தனி அலுவலர் மற்றம் துணை பதிவாளரின் ஒப்புதல் வேண்டும். மனுதாரர் தனக்கு சங்கத்தின் நிதி நிலைமை சரியாகும் வரை கூடுதல் சம்பளத்தை

பொறுத்து நான் நீதிமன்றத்தில் வழக்கு தற்போது தொடர மாட்டேன் என்றும் பின்னர் பெற்றுக்கொள்வதாகவும் உறுதிமொழி எழுதி கொடுத்துள்ளார். மனுதாரர் கொடுத்த கடனை திரும்ப வசூலிக்க நடவடிக்கை எடுக்க வில்லை என்பதற்கு ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. THATCO மூலம் மனுதாரர் ரூபாய் 70,000 கடன் கொடுத்ததை தற்போது வட்டியுடன் சேர்த்து ரூ. 4,00,000/- ஆக உள்ளதை வசூல் செய்யாமல் 1992 ல் இருந்து வந்துள்ளார், அதுபோக Consumer loan கொடுத்தற்கும் எந்த வித தகவலும் கொடுக்காமல் இருந்து வந்துள்ளார். நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. Consumer loan க்கு எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை. Consumer loan கொடுத்த நபர் எந்த முகவரியில் உள்ளார் என்பதும் தெரியவில்லை. வங்கியின் நிதிநிலை நெருக்கடிக்கு மனுதாரர் காரணம் அல்ல என்றும், அரசின் தவறான கொள்கையில் தான் மேற்கொண்டுள்ளது என்றால் சரியல்ல. EX.R8 வழக்கிற்கு சம்பந்தப்பட்ட ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. மனுதாரர் சரியாக நிர்வாகம் செய்ய வில்லை என்பதால் தான் Ex R 8 மூலம் ஒரு ஊழியரை மற்றொரு கிளைக்கு மாற்றம் செய்துள்ளோம் என்பதை காட்டுவதற்காக Ex R8 தாக்கல் செய்துள்ளோம். மனுதாரர் கொடுத்துள்ள தனிநபர் கடன் தொகைகளை

சரியான முறையில் வசூல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அதற்காக Auditing Report தாக்கல் செய்துள்ளேன். மனுதாரர் சங்கத்திற்குன்டான Income Tax தொகை செலுத்தவில்லை என்றால் Society கணக்கு 2025 ஜனவரி ல் Freeze செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் இதுசம்பந்தமாக உயர் நீதிமன்றத்தில் நடந்து வந்த வழக்கு என்னவாயிற்று என்பது தெரியாது. மனுதாரர் ஓய்வு பெற்ற பிறகு அவருக்கு பின்பு பொறுப்பு எடுத்த செயலாளர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு சரியாக நடத்தவில்லை என்பதால், அதன் பலனாகத்தான் வங்கியின் கணக்கு Freeze செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மனுதாரர் ஜனவரி மாதம் 2019 ல் ஓய்வு பெற்றார். IT துறையில் இருந்து எதிர்மனுதாரர் சொன்ன ரூபாய். 8,77,837/- செலுத்த வேண்டிய பாக்கி உள்ளது என்று 19.12.2018 ல் தான் அறிவிப்பு வந்தது என்றால் சரிதான். மனுதாரர் அடுத்த 30 நாளில் ஓய்வு பெற இருந்தால் A.Revathi என்பவருக்கு கூடுதல் பொறுப்பு கொடுக்கப்பட்டது என்றும் ரேவதி என்பவர் தான் அதை சரியான முறையில் கவனிக்கவில்லை என்றால் சரியல்ல. 3 வருடம் காலம் அதாவது 2015 லிருந்து 2018 வரையான காலத்திற்குத்தான் மனுதாரர் சங்கத்திற்கான Income Tax செலுத்தவில்லை என்று அறிவிப்பு வந்தது. நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. IT தொகையை குறைத்து

தரவேண்டும் என்று ரம்யா என்ற Auditor மூலம் நடவடிக்கை எடுத்து வந்தார் என்றும் அது சம்பந்தமாக உயர் நீதிமன்றத்தில் Stay உத்தரவு கொடுத்தும் அதற்கு பின்னிட்டு வழக்கு நடவடிக்கைகளை எடுக்க வில்லை என்பதால் தான் Stay vacate ஆகிவிட்டது என்றால் சரியல்ல. வழக்கு சம்பந்தமாக மனுதாரரின் Mail Account க்குதான் உயர் நீதிமன்ற வழக்கறிஞர் தகவல் அனுப்பிவந்ததால், சங்கத்திற்கு வழக்கு சம்பந்தமட்ட தகவல் ஏதும் கிடைக்காமல் இருந்தது. மனுதாரர் மனுதாரருக்கு மட்டுமே Mail வருகின்ற மாதிரி ஏற்பாடு செய்திருந்தால் சங்கத்திற்கு Mail வரவில்லை. சங்கத்திலிருந்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சம்பந்தமாக சங்கத்தின் நாட்குறிப்பில் பதிவு செய்யப்பட்டிருந்தது என்றால் இல்லை. ரேவதி என்பவருக்கு மனுதாரரின் ஓய்விற்கு பிறகு வழக்கு சம்பந்தப்பட்ட விவரங்கள் தெரியப்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. மனுதாரர் மீது பொய்யாக குற்றச்சாட்டு வைத்துள்ளீர் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு கொடுக்க வேண்டிய தொகையை கொடுக்காமல் இருப்பதற்கு அவர் மீது பொய்யான குற்றச்சாட்டு வைத்துள்ளோம் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு கொடுக்க வேண்டிய தொகையை ரூ. 3,00,000/- காசோலையாக கொடுத்த போது வாங்க மறுத்துவிட்டார். மனுதாரருக்கு ரூபாய். 9,00,000/- மட்டுமே

தற்போது கொடுக்க வேண்டியுள்ளது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் பாக்கி தொகை ரூபாய். 17,02,610/- என்று உள்ளது. மனுதாரர் அந்த தொகையில் PF தொகை ரூ 2,67,153/- சேர்த்துள்ளார் . ஆனால் அந்த தொகை போக ரூ. 14,45,457/- சம்பள பாக்கி தொகையில் ருபாய் 450000 கொடுத்துள்ளோம். மீதம் ரூ.9,95,457/- கொடுக்க வேண்டியுள்ளது. அந்த தொகையில் தான் ரூபாய்.3,00,000/-க்கு 2023ல் மனுதாரருக்கு காசோலையாக கொடுத்ததில் அவர் வாங்க மறுத்துவிட்டார் . PF தொகை அவர் தனியாக தான் PF Tribunal லிருந்து பெற வேண்டும். நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல.

Sd/-xxx

தலைமை தாங்கும் அதிகாரி,

முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,

கோயமுத்தூர்.